# அனல்

புதுமலர்: 11 இதழ்: 03 வைகாசி - ஆனி

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

- ரோமர் 12:11 -

ஆசிரியர்:
வே.மகாராஜா

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.05.2014

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - அல்லாடும் மனசு!
- வாலிபர் வளாகம் - நல்ல மாஸ்ரர்
- சிலுவையில் சிந்தின இரத்தம்
- பெண்கள் பக்கம் - நடவாதே, நில்லாதே, உட்காராதே!
- நற்செய்திப்பகுதி - உனக்காக கண்ணீர் விடும் இயேசு
- பக்தர்களின் பயிலகம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 61
- ஆண்களிடம் பேசக்கூடாதா?
- அருட்பணியாளர் சரிதை - கார்ல் பேக்கர், மேரி ஜோன்ஸ்
- வினா விடை - 63
- அனலின் ஆன்மீக விருந்து


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.


**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**


The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய்ப் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்



**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!**

**வைகாசி** – ஆனி இதழினூடாக மறுபடியும் சந்திக்கச் செய்த ஆண்டவருக்கே மகிமையுண்டாகட்டும்.

**தேவனைத் தேவனாக, அவரை அவருடைய வல்லமையின்படி, அவருடைய இரக்கத்தின்படி நாம் பார்க்கப்பழக வேண்டும்.** முற்றுமான அவருடைய செயல்களை நாம் புரிந்து கொள்ளும் இருதயத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

**மாற்கு 5:37-42** *ஜெப ஆலயத் தலைவனுடைய மகள் மரித்துப் போன போது இயேசு அவனுடைய வீட்டுக்கு வருகின்றார். மரித்துப்போன மகளைச் சுற்றியிருந்து அனேகர் அழுகின்றனர். ஏனெனில் அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் பிள்ளை மரித்துப்போய்விட்டாள் என்பதே. இயேசு அங்கே வந்து பிள்ளை மரிக்கவில்லை; நித்திரையாய் இருக்கிறாள் என்று சொன்ன போது அவர்களுக்கு சிரிப்பு வந்தது. இந்த நகைப்பு மரித்துப்போன பெண் எங்கள் கண்களுக்கு முன்பாக இருக்கும் போது இவருடைய கதையைப் பாருங்கள் என்ற கேலிச்சிரிப்பு, அவிசுவாசம் நிறைந்த சிரிப்பு.*

**இயேசுவை அறிகின்ற பிரகாரமாய் அறிந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அவருடைய சர்வ வல்லமையை விளங்கிக் கொள்வார்கள்.** நாம் அறிந்ததை வைத்து, எம்மால் புரிந்து கொள்ளக்கூடிய அளவை வைத்து தேவனுக்கு எல்லை போடவும் கூடாது. அவருடைய வார்த்தைகளை அசட்டை பண்ணவும் கூடாது. **ஏனெனில் இயேசு மரித்துப் போனவர்களையும் உயிரோடு எழுப்பும் வல்லமையுள்ளவர்.**

இயேசுவைப்பார்த்து நகைத்தவர்களை வெளியே அனுப்பிய பின், பிள்ளையை உயிரோடே எழுப்பினார். இயேசுவை ஒரே இரட்சகராக, சர்வ வல்லவராக, பாவங்களை மன்னிக்கிறவராக, அற்புதங்களைச் செய்யக் கூடியவராக, சுகமாக்குபவராக, விடுதலை தருபவராக, பரலோகம் செல்வதற்கு ஒரே வழியாக பார்ப்பதற்கு உன் வாழ்வில் தடைபோடுகின்ற அனைத்தையும், உன் வாழ்க்கையை விட்டு வெளியேற்றிவிடு. **உங்களுடைய அறிவின் அளவுக்குத்தக்கதாக வல்ல தேவனுடைய வல்லமையின் அளவை விசுவாசக் கண்களாலே கண்டு கொள். அந்த இயேசு உன் வாழ்வில் அற்புதம் செய்வார்.**

– ஆசிரியர் –

# கதையும் கற்றதும்...



# இல்லாமும் மனசு...!

அண்ணனாய் இருப்பது ஸ்மித்திற்கு பிடிக்கவில்லை. அண்ணனாய் இருப்பதைக்காட்டிலும் தம்பியாய் பிறந்து இருந்தால் பென்ஜமீனைப் போன்று தான் செல்லமாக வாழ்ந்திருப்பேனே என எண்ணினான். எனவே இவ்வாறு சிந்தித்தவனுக்கு கோபம் கோபமாய் வந்தது. இந்த கோபத்தை தீர்க்க என்ன செய்யலாம் என தனது வீட்டு மூலையில் அமர்ந்திருந்து சிந்தித்தான். அவ்வேளை சமையலறைக்குள் இருந்து வெளியே வந்த அம்மா ஸ்ரெலா ஸ்மித்தைப் பார்த்து கேட்டாா: என்னடா, தனிய இருந்து யோசிக்கின்றாய்...? ஸ்மித்துக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனாலும் தன்னை சுதாகரித்துக் கொண்டவனாய், இல்லையம்மா, தம்பி பாவம்! அவனைக் குறித்து தான் சிந்திக்கின்றேன் என்று பொய் சொன்னான். அதற்கு அம்மா,

நடந்து கொள் என்று நச்சரிப்பது போன்று கூறிவிட்டுச் சென்றாள். இதைக் கேட்ட ஸ்மித்துக்கு இன்னும் கோபம் கோபமாய் வந்தது.

ஸ்மித்திற்கு இப்போது 07 வயது ஆகின்றது. தம்பியாகிய பென்ஜமீனுக்கு இப்போது தான் 05 வயது. நான் ஏன் முதலாவதாக பிறந்தேன்? இரண்டாவதாக தம்பியைப் போன்று பிறந்து இருந்தால் எல்லாரும் என்னை தூக்கி செல்லம் கொஞ்சியிருப்பார்களே!, என்னைச் சுற்றி சுற்றி வந்திருப்பார்களே, என்னை அழவிடாமல் எல்லாவற்றையும் வாங்கித் தந்திருப்பார்களே என எண்ணிக் கொண்டு தன் பாசடாலை சீருடைகளை அணிந்தவன் பாடசாலைக்கு ஏற்றிச் செல்லும் வாகனம் வந்தமையால் அதில் ஏறி பாடசாலைக்கு புறப்பட்டான்.

நல்ல வேளையாக தான் படிக்கும் பாடசாலையில் தன் தம்பி படிக்கவில்லையே எனவும் எண்ணிக் கொண்டான். வீட்டுக்கு அருகிலேயே தம்பியின் பாலர் பாடசாலை அமைந்திருந்தது. அத்துடன் அவனது பாடசாலை நேரமும் சில மணி நேரங்களே. ஆகவே பாடசாலை செல்லும் நேரங்களிலாவது தன் தம்பியை விட்டு பிரிந்து இருப்பதைக்

குறித்து ஸ்மித் சந்தோஷப்பட்டான். பாடசாலையில் ஸ்மித்திற்கு நேரம் நன்றாகவே செல்லும். அங்கே தம்பியின் தொல்லை இருப்பதில்லை. பாடசாலையில் நண்பர்கள், ஆசிரியர்கள் என்று பொழுது போகும். ஆனாலும் மதியம் ஆனவுடன் மீண்டும் வீட்டுக்கு வரவேண்டும். வீடு வந்தவுடன் மீண்டும் அப்பா, அம்மா தம்பி என பழைய கதையே ஆரம்பிக்கும். இதை நினைத்த ஸ்மித்திற்கு இன்னும் எரிச்சலாக இருந்தது.

தம்பி பாடசாலை முடிந்து நேரத்தோடு வீடு வருவதினால் நன்றாக சாப்பிட்டு, தூங்கி எழுந்து மாலை வேளைகளில் துடியாட்டமாய் இருப்பான். ஆனால் ஸ்மித்திற்கோ பாடசாலையில் கொடுக்கப்பட்ட வீட்டு பாடங்களை செய்ய வேண்டி இருக்கும். அப்படி அவன் தன் வீட்டுப்பாடங்களை செய்து கொண்டிருக்கும் போது தம்பி வந்து இவனது கொப்பிகளில் கீறி விளையாடுவான். சிலவேளை கொப்பி ஒற்றை களையும் கிழித்து விடுவான். இதனால் கோபமடைந்து தம்பியை முறைத்துப் பார்த்தாலோ, திட்டினாலோ சத்தமாக கத்தி அழ ஆரம்பித்து விடுவான். அவனது சத்தம் பெரிதாக கேட்டால் அப்பாவிடம் அல்லது அம்மாவிடம் ஸ்மித் திட்டு வாங்க வேண்டி வரும். அப்பா அல்லது அம்மா திட்டினால் ஸ்மித்திற்கு கோபம் தான் வரும். முன்னெல்லாம் திட்டு விழுந்தால் ஸ்மித் அழுதுவிடுவான். அவ்வாறு அழுதால் இன்னும் அதிகமாய் திட்டுக் கிடைக்கும்.

*"அண்ணாகிய நீ இப்படி அழுது காண்பித்தால் உன் தம்பியும் உன்னைப் போன்று செய்ய ஆரம்பித்து விடுவான்"* என்று இன்னும் பேச்சு கிடைக்கும். அத்தோடு அம்மா சொல்வா: *ஆம்பிளைப் பிள்ளையள் ஒரு போதும் அழக்கூடாதாம்.* ஆனால் எங்கள் தாத்தா மரித்த போது அப்பா அழுதிருக்கின்றார். அப்போது அழுத அப்பாவிடம் யாரும் சொல்லவில்லை, ஆம்பிளையள் அழக்கூடாது என்று. அத்துடன் மரணச் சடங்கிற்கு வந்திருந்த அப்பாவின் மாமா, *நன்றாக அழுது தீர், அடக்கி வைக்காதே!, நெஞ்சில் இருப்பதை வெளியே கொட்டி விடுவது நல்லது* என்றும் சொன்னார். ஆனால் நான் அழும் போது மாத்திரம் திட்டுகின்றார்களே என தனக்குள்ளே எண்ணிக் கொண்டான். அவனது பாடசாலையிலும் பையன்கள் அழக்கூடாது என்று அவனது ஆசிரியர்களும் பேசிக்கொள்வதும் இப்போது அவனுக்கு நினைவுக்கு வந்தது. இதையெல்லாம் நினைக்க நினைக்க தான் ஏன் அண்ணனாக பிறந்தேன் என்று எரிச்சலடைந்தான்.

இப்படியே சலிப்போடு ஒரு சில நாட்கள் நகர்ந்தன. அவ்வாறு ஒரு நாள் மாலை வேளையில் தம்பியோடு விளையாடிக் கொண்டிருக்கும் போது அப்பா அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு வந்தார். வந்தவர் அம்மாவைக் கூப்பிட்டு இருவருமாக சொன்னார்கள்: *நாளை நாங்கள் எல்லாரும் கடைக்கு செல்லப் போகின்றோம். உங்களுக்கு ஒரு பொருள் வாங்கப் போகின்றோம்? என்னவென்று சொல்லுங்கள் பார்ப்போம்?* என்று மகிழ்ச்சியோடு கேட்டனர். ஸ்மித் சிந்தித்தான், என்ன தம்பிக்குத் தானே வாங்கப்போகின்றார்கள். எனவே எதுவும் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தான். ஆனாலும் அந்த அமைதியை

குலைத்து அப்பாவே அந்த முடிச்சை அவிழ்த்தார். உங்களுக்காக ஒரு மிதிவண்டி வாங்கப் போகின்றோம் என்றார். உடனே தம்பி துள்ளிக் குதித்து: எனக்கா வாங்கப் போகின்றீர்கள்? என்று கேட்டான். அதற்கு அம்மா சொன்னார்: மிதிவண்டி உனக்கல்ல; அண்ணனுக்குத் தான் வாங்கப் போகின்றோம். அவனது பழைய மிதிவண்டி சிறிதாகிவிட்டது. அண்ணன் இப்போது வளர்ந்து விட்டான். எனவே அண்ணனுக்குத் தான் மிதிவண்டி என்றார்.

இதைக் கேட்ட தம்பி உடனே அழத்தொடங்கினான. நான் ஏன் தம்பியாக பிறந்தேன்? நான் தம்பியாக இருப்பதினால் எப்போதும் அண்ணன் பாவித்தவைகளையே நான் பாவிக்க வேண்டியிருக்கின்றது. அவன் சொல்வதையே நான் கேட்க வேண்டியிருக்கின்றது. நான் தம்பியாக பிறந்ததை வெறுக்கின்றேன்! என்று கத்த ஆரம்பித்தான். **இதனைக் கேட்ட ஸ்மித்திற்கு தன் தலையில் சும்மட்டியால் அடித்ததைப் போன்று இருந்தது. தான் தம்பியாக இருந்திருக்க வேண்டும் என்று நினைத்திருக்க தம்பி தான் அண்ணனாக பிறந்திருக்க வேண்டும் என்று நினைக்கின்றானே என எண்ணியவனுக்கு தலை சுற்றத் தொடங்கியது.**

ஆம் நண்பர்களே! இந்த அண்ணன் - தம்பியைப் போன்று நாமும் நமக்கு தேவன் கொடுத்தவற்றில் மனரம்மியமாய் இருக்காமல் மற்றவர்களைப் பார்த்து, அவர்களைப் போன்று பிறந்திருக்க வேண்டும், அவர்களைப் போன்று வாழ வேண்டும் என்று ஏக்கப் பெருமூச்சு விடுகின்றோம். எம் வழிகளைச் சிந்தித்துப் பார்ப்போம். எமக்கு இருப்பதே போதுமென்று மனநிறைவுடன் வாழ்ந்து வாழ்வை சிறப்பிப்போமா?

வை.விமல்

# வினா விடை – 62

## சரியான விடை எழுதியவர்கள்

01. எஸ்.இருதயராசா, திருநெல்வேலி
02. க.விக்னேஸ்வரன், ஊர்காவற்றுறை
03. வி.சர்மிளா - ஊர்காவற்றுறை
04. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
05. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
06. இ.எவன் செலினா - திருநெல்வெலி






**பிரியமான வாலிப உள்ளங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!**

**வா**லிபர் வளாகத்தினூடாக நீங்கள் நிச்சயமாகவே போஷிக்கப்படுவீர்கள் என்பதனை நான் நம்புகின்றேன். தயவு செய்து ஜெபத்தோடு இப் பகுதியை வாசிக்கவும்.

*"அன்பின் ஆண்டவரே, இந்த நாளில் நீர் என்னோடு இடைப்பட்டு என்னை வனைந்து கொள்வீராக. இயேசுவே வேதத்தில் உள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளுவீராக." ஆமென்!.*

வெளியான தோற்றம் அனைத்தும் ஆண்டவருடைய குடும்பத்திலே பிறந்த பிள்ளை போல் தோற்றமளித்து, உள்ளே ஆண்டவரோடு சரியான (நேர்மையான) தொடர்பு அற்றவர்களாய் வாழ்வது மகா ஆபத்தானதும், கொடியதுமாகும்.

**மாற்கு 10:17-22 (17.) பின்பு அவர் புறப் பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு: நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டும் என்று**

கேட்டான். 18. அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே. 19. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார். 20. அதற்கு அவன்: போதகரே, இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். 21. இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா என்றார். 22. அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்.

இங்கே ஓர் இளமை இரத்தம் துடியாய் துடிக்கிறது.

எதற்காக? நித்திய ஜீவனைச் சுதந்தரிப்பதற்காக. நித்திய ஜீவன் என்ற ஒன்று உண்டு; அதற்கு இயேசு தான் வழி என்பதனையும் முழுமையாக அறிந்திருந்த வாலிபன் ஓடோடி வந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து அவரை உயர்த்தி நல்ல போதகரே (Good Teacher) என்றும் அறிக்கை பண்ணுகின்றான்.

"நித்திய ஜீவன் என்ற ஒன்று உண்டு; அதற்கு இயேசு தான் வழி என்பதனையும் முழுமையாக அறிந்திருந்த வாலிபன் ஓடோடி வந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து அவரை உயர்த்தி நல்ல போதகரே என்றும் அறிக்கை பண்ணுகின்றான்.

அவனது அனைத்து நடவடிக்கையும் ஓர் சிறப்பான தேவ பிள்ளையாகவும், எந்தவிதமான குறைவுகளும் அற்றவனாகவுமே காண்பிக்கின்றது. இவனைக் குறித்து, மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய 3 நற்செய்தி நூல்களிலும் கூறப்பட்டிருக்கின்றது.

தேவ ராஜ்யத்தை (பரலோகத்தை) அடைய வாஞ்சித்த வாலிபன்.

இவனைக் குறித்து சில காரியங்களை பார்ப்போம்.

## 01. ஐசுவரியவான் / பணம் படைத்தவன்

பணம் படைத்தவர்கள் (ஐசுவரியவான்கள்) பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிது என்று இயேசு கூறியிருக்கின்றார்.

**“ பணம் படைத்தவர்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்று அர்த்தமல்ல; அவர்கள் பிரவேசிப்பது கடினமான காரியம். ”**

**மத்தேயு 19:23 அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.** ஆகையால் ஐசுவரியவான்கள் (பணம் படைத்தவர்கள்) பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்று அர்த்தமல்ல; அவர்கள் பிரவேசிப்பது கடினமான காரியம்.

ஐசுவரியவான்களிலும் பரலோக ராஜ்யத்தை ஏற்றுக் கொண்டவர்கள் உண்டு. சகேயு, நிக்கதேமு, அரிமத்தி ஊரானாகிய யோசேப்பு..... இவர்கள் எல்லாரும் பணம் படைத்தவர்கள் தான். ஆனாலும் பரலோக ராஜ்யத்தை முக்கியமானதாக கருதி, தேவ நோக்கம் இந்தப் பூமியில் நிறைவேறவும், தேவ ராஜ்யம் கட்டப்படவும் எந்த விலைக் கிரயத்தையும் செலுத்த ஆயத்தமாக இருந்தவர்கள், அர்ப்பணிப்பில ஆளமாக வேர்விட்டவர்கள்.

## 02. அதிகாரி

லூக்கா சொல்வது போல் இவன் ஓர் உயர் பதவியில் இருந்தவன் ஆவான். வேத வியாக்கியானவியலாளர்களின் கருத்துப்படி சனகெரிப் சங்கத்தின் ஓர் அங்கத்தவனாகவும் கூட இருந்திருக்கலாம். அரசியலிலும், அதிகாரங்களிலும் நல்ல செல்வாக்குள்ளவனாய் இருந்தான்.

## 03. வாலிபன்

அருமையான தீர்மானங்கள் செய்யக் கூடிய ஓர் நல்ல வயது. தெளிந்த புத்தியோடு நன்றாய் ஆராய்ந்து பார்த்து, எல்லாவற்றையும் அறிந்து கொள்ளுகிறான். ஏனோ தானோ வென்று அவன் இயேசு கிறிஸ்துவண்டை வரவில்லை. மாற்கு கூறு

கின்றபடி ஓடி வருகின்றான். முழங்காற் படியிட்டுக் கேட்கின்றான். ஆர்வத்தோடு வந்து கேட்கின்றான். ஆர்வமுள்ளவர்கள் கூட ஆசீர்வாதத்தை இழந்து விடுகின்றனர்.

## 04. நற்குணமுள்ளவன்

பிரமாண எழுத்தின்படி குற்றம்சாட்டப்படாதவன். பாரம்பரியங்களைக் கைக்கொள்வதில் எள்ளளவும் தவறாதவன். காரணம்; கொலை செய்யாதிருப்பாயாக, விபச்சாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக, உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று ஆண்டவர் இயேசு கூறியதற்கு, அவன் பிரதியுத்தரமாக; **என் சிறுவயது முதல் இவைகளைக் கைக்கொண்டிருக்கிறேன்** என்றான்.

இருந்தும் இவனுடைய நற்குணத்தில் ஜீவன் இல்லை. ஒரு இயந்திரம் போன்று பழக்க தோசமாக கைக்கொண்டு வந்தானேயொழிய ஓர் உயிரோட்டமுள்ள ஜீவனைப் பெற்ற வாழ்வு வாழவில்லை. தன்னிலுள்ள வெறுமையை ஒப்புக் கொள்ளுகிறான்.

**பணம், பதவி, வாலிபம், ஆர்வம், நற்குணம்** அனைத்தையும் உடையவனாக இருந்த இந்த வாலிபன் தன் வாழ்விலுள்ள யாராலும், எவற்றாலும் நிரப்ப முடியாத ஓர் வெறுமையை உணர்ந்தான்.

இதை வாசிக்கும் அருமை சகோதரனே, சகோதரியே உன் வாழ்விலும் அனைத்து உரிமைகளையும், திறமைகளையும், செல்வாக்கு அனைத்தையும் பெற்றிருந்தும் இன்னமும் உன் வாழ்வில் ஓர் தனிமை, வெறுமை,

> **மாற்து கூறுகின்றபடி ஓடி வருகின்றான். முழங்காற் படியிட்டுக் கேட்கின்றான். ஆர்வத் தோடு வந்து கேட்கின்றான். ஆர்வமுள்ளவர்கள் கூட ஆசீர்வாதத்தை இழந்து விடுகின்றனர்.**

அதைரியம் காணப்படுமானால் கலங்காதே கிறிஸ்து விடம் அதற்கான பதிலுண்டு.

**இயேசுகிறிஸ்துவின் பதிலை கேட்ட இந்த வாலிபன் துக்கத்தோடே திரும்பி போய்விட்டான்.** ஆண்டவரின் அன்பின் பிரதியுத்தரம் அவனை அதிர வைத்துவிட்டது. சற்றே

னும் எதிர்பாராத பதிலாக அமைந் திருந்தது. அவன் உடனடியாகவே தன் பழைய வாழ்விற்கு திரும்பி போய் விட்டான்.

## இவன் திரும்பி சென்றதற்கான சில காரணங்கள்:

* சற்றேனும் எதிர்பாராத பதில் கிடைத்ததால்
* உன்னிடம் ஒரு குறையும் இல்லை; நீ சரியாய் இருக்கிறாய் என்று இயேசு சொல்லியிருப்பார் என எதிர்பார்த்தது
* இன்னும் உன் ஐசுவரியத்தை அதிகரித்துக் கொள
* சீக்கிரமாய் திருமணம் செய்து கொள்
* நல்ல சம்பளத்தோடு கூடிய வேறு வேலை தேடு
* என்னோடு கூட (இயேசுவோடு) ஊழியத்திற்கு வா
* பெண் வீட்டாரை எப்படியாவது வலிந்து ஒரு பெரிய வீட்டையும், 50 இலட்சம் ரூபா பணத்தை சீதனமாக கேள்
* புத்தம் புதிய கார் ஒன்றை வாங்கு
* இப்போது இருக்கும் நிலம் போதாது, இன்னமும் வாங்கிவிடு
* ஓய்வில்லாமல் வேலை செய் (பகல், இரவு)
* நான் இப்போது செய்து கொண்டிருக்கும் என் ஊழியத்தையும், ஊழியர் குழாமையும் உன் பணத்தினால் மாதாந்தம் தாங்குவாயா?

இப்படி இன்னும் பல விசித்திரமான பதில்களை எதிர் பார்த்தவனுக்கு **இயேசு கூறியது கசப்பாகவே இருந்தது.**

இயேசு ஐசுவரி யமான வாலிபனை அவனது பலவீனமான பகுதியாகிய ஆஸ்தியில் சோதித்தார். அவன் தன் ஆஸ்தியைக் காட்டிலும் கிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவரை முதலிடத்தில் வைக்க விரும்பவில்லை. மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், அவர் களும் உன் ஆசீர்வாதத் தால் இளைப்பாறுதல் அடைய வேண்டும் (பசி தீர வேண்டும்). கிறிஸ்து நம்மிடம் எதைக் கேட் கின்றாரோ அதைக் கொடுக்க ஆயத்தமாயி ருக்க வேண்டும்.

ஆண்டவருக்கு நம் அர்ப்பணிப்பு எந்த வகையிலும் குறைந்த தாய் இருக்கக் கூடாது.

**உனது வாழ்வில் எப்படி?**



**போதகர்**
**வேதநாயகம் சுமணன்**

# சிலுவையில் சிந்தின இரத்தம்

உலகத்தில் எத்தனையோ விதமான மனிதர்கள் தோன்றி மறைந்திருக்கின்றனர். இன்னும் பலவிதமான மக்கள் கூட்டம் இப்போது வாழ்ந்து கொண்டு இருக்கின்றது.

தேவன் மனிதனை உண்டாக்கிய நாள் முதற்கொண்டு தேவனும் மனிதனும் நல்ல பரிசுத்தமான, சந்தோஷமான ஓர் உறவினிலே தான் இருந்தனர். ஆனால் தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமல், செய்யக்கூடாததைச் செய்தபடியினால் மனிதனிற்கும் தேவனுக்கும் இடையே பெரும் பிளப்பு உண்டானது. முழு மனுக்குலத்தின் மீதும் பாவத்தின் ஆளுகையும், பாவத்தின் வித்தும் தோற்றம் பெற்று விட்டது. **ஒருவன் விரும்பாவிட்டாலும் இவ் உலகத்திலே பிறக்கும் போது பாவியாகத் தான் (தேவனுடன் தொடர்பு நிலையிலே தொலைந்து போனவனாகவே) காணப்படுகின்றான்.**

தேவனே இதற்கான பரிகாரத்தை செய்ய வேண்டியிருந்தது. தானே இப் பூமிக்கு வரவேண்டியும். பாவங்களை சுமந்து தீர்த்து மறுபடியும் மனுக்குலத்தை தன்னோடு ஒப்புரவாக்க வேண்டியும் இருந்தது.

அவர் மனிதனாக அவதரித்து, இந்தப் பூமியில் வாழ்ந்து (குற்றமற்றவராக/பரிசுத்தராக) உலகத்தின் பாவத்தை சிலுவையில் சுமந்து தீர்த்தார்.

**இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் இப் பூமியில் ஜெயமுள்ள ஒரு வாழ்வும், மரணத்திற்குப் பின் நித்திய வாழ்வும் நிச்சயம் உண்டு.**

அன்புள்ள நண்பனே, அவர் சிலுவையில் சிந்திய இரத்தம் உன் பாவங்களை கழுவி சுத்திகரிக்க அவரிடம் (இயேசுவிடம்) பாவங்களை அறிக்கையிடுவாயா?

ரேமா







மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரியங்கள் மூன்றும் பெண்களாகிய நாம் செய்கின்ற காரியங்களே. ஆனால் இதனை வாசிக்கும் சகோதரியே, உன் கண்களை 1வது சங்கீதத்திற்கு திருப்புவாயாக இருந்தால் நீ உன் பாவ நோயிலிருந்து விடுதலை பெறமுடியும்.

## 01. நடவாதே!

<u>சங்கீதம் 1:1 துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும்.</u>

நாம் இன்று யாருடைய ஆலோசனையின்படி நடக்கின்றோம்?

**ஆதியாகமம் 2:17 ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று தேவன் கட்டளையிட்டார்.**

**ஆதியாகமம் 3:5 நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது சர்ப்பம்.**


> ”
>
> சர்ப்பத்தின் ஆலோசனை அவளுடைய வாழ்க்கையில் முதல் இடத்தைப் பிடித்து விட்டது. இதின் நிமித்தம் சாபம், பாவம் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிப் பிடித்தன் காரணத்தால் தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்தில் இருந்து துரத்திவிட்டார்.

*நடந்தது என்ன?* **ஏவாள் தேவன் கொடுத்த கட்டளையின் ஆலோசனைகளைத் தள்ளிவிட்டு, சர்ப்பத்தின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு கனியைப் பறித்தாள், புசித்தாள்; தன் கணவனுக்கும் கொடுத்தாள்.** *ஏவாளுக்கு சர்ப்பத்தின் ஆலோசனை: புசிப்புக்கு நல்லது, பார்வைக்கு இன்பம், புத்தியைத் தெளிவிக்கும், இச்சிக்கப்படத்தக்க விருட்சம் என்று கண்டு சர்ப்பத்தின் ஆலோசனை அவளுடைய வாழ்க்கையில் முதல் இடத்தைப் பிடித்து விட்டது.* இதன் நிமித்தம் சாபம், பாவம் அவர்களுடைய வாழ்க்கை யைப் பற்றிப் பிடித்தன் காரணத்தால் தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்தில் இருந்து துரத்திவிட்டார்.


**சங்கீதம் 1:6 துன்மார்க்கரின் வழியோ அழியும்.**

**இதை வாசிக்கும் சகோதரியே நீயும் கூட கடந்த காலங்களில் யாருடைய ஆலோசனையின் வழியில் நடந்தாய் என்பதனைக் குறித்து சிந்தித்துப்பார்.** *துன்மார்க்கரின் ஆலோசனைகள் எமது காதுகளிற்கு வரும். துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடந்து தேவ ஆலோசனையை கைவிட்டபடியால் உன் வாழ்வு ஆசீர்வாதமாய் இல்லாமல் சிக்கல் நிறைந்ததாக காணப்படலாம்.* ஆனால் யோபு என்னும் பக்தன், துன்மார்க்கரின் ஆலோசனை எனக்குத் தூரமாயிருப்பதாக என்று கூறியது போன்று [யோபு 21:16] நாமும் செய்யத் தீர்மானிப்போம்.

**சங்கீதம் 32:8 நான் உனக்குப் போதித்து. நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.** *தேவனுடைய ஆலோசனையில் நடக்கத் தீர்மானம் எடுப்பாயானால் தேவனுடைய ஆசீர்வாதத்தை நீ கண்டு கொள்வாய்.*




## 02. நில்லாதே!



**<u>சங்கீதம் 1:1 பாவிகளுடைய வழியில் நில்லாமலும்.</u>** *யார் இந்தப் பாவி?* **தேவனுடைய கட்டளையை அல்லது தேவனுடைய எல்லைக் கோட்டை மீறி நடப்பவர்கள் பாவிகள்** *என குறிப்பிடப்படுகின்றது.*

ஏவாள் கட்டளையை மீறி எல்லைக் கோட்டைத் தாண்டினாள். தேவன் சொன்னது உண்டோ? என்ற கேள்வியை சர்ப்பம் கேட்டவுடனே, ஏவாள் சம்பாசனையை முடித்து அவ்விடத்தைவிட்டு விலகி இருக்கலாம். ஆனால் அவளே வழியில் நின்று சம்பாசனையைத் தொடர்ந்தாள். தேவ கட்டளையை மீறி எல்லைக் கோட்டை தாண்டியதின் நிமித்தம் கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தன்னை ஒளித்துக் கொண்டாள். நீ பாவம் செய்யவில்லை; ஆனால் பாவிகளுடைய வழியில் நீ காணப்பட்டால் நீயும் அந்த பாவத்திற்குள் விழுந்து விடுவாய்.



**சங்கீதம் 119:11 நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.** கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருந்தால் பாவத்தின் வழியில் நிற்கமாட்டாய்.

## 03. உட்காராதே!





**சங்கீதம் 1:1 பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,**

தேவன் நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்றார். ஆனால் சர்ப்பம் நீங்கள் சாகப்போவதில்லை; அல்லாமலும் தேவர்களைப் போன்று இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்று தேவனை பரியாசம் செய்தது. சர்ப்புத்தின் பரியாசக் கதைகளுக்கு இடம் கொடுத்து ஏவாள் நிர்வாணியாகிவிட்டாள். சகோதரியே கடந்த காலங்களில் உன் தேவனுடைய வார்த்தையை, தேவன் உனக்கு கொடுத்த சபையை, உன் போதகர்களைக் குறித்து பரியாசக்காரர் பரியாசம் செய்த போது நீயும் அந்த இடத்தில் உட்கார்ந்து இருந்தாயா?

ஏவாளின் பரிதாப நிலை உனக்கு ஏற்படக்கூடாது என்பதற்காய் தேவன் இச் சஞ்சிகை மூலம் உன்னை எச்சரிக்கின்றார். ஏவாள் போன்று சர்ப்பம் என்னை வஞ்சித்தது என்று சொல்லி மற்றவர்கள் மேல் குற்றம் சாட்ட முற்பட வேண்டாம். **சங்கீதம் 26:4 வீணரோடே நான் உட்காரவில்லை. வஞ்சகரிடத்தில் நான் சேருவதில்லை.** வீணரோடே நான் உட்காருவதில்லை என தீர்மானம் எடு. அப்போது தேவ இரக்கத்தைப் பெறுவாய்.

ஒரு வயது முதிர்ந்த தாயாருக்கு பூந்தோட்டம் வைப்பதில் மிகவும் விருப்பம் உடையவளாய் இருந்தாள். ஒரு நாள் அழகிய பூச்செடிகள் விற்பனை செய்யும் தோட்டத்திற்கு சென்றாள். அங்கு பலவிதமான அழகிய செடிகள், ரோஜா மலர், செவ்வந்தி மல்லிகை சூரியகாந்தி என பல தரப்பட்ட செடிகள் இருந்தன. அதில் ஒன்று நன்றாக காயவைக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்த்த போது குப்பை போன்று இருந்தது. ஆனாலும் அதன் பெயர் உயிர்த்தெழுதல் செடி என்று எழுதப்பட்டிருந்தது. அதை வாங்கியவர் வீட்டிற்கு கொண்டு வந்து ஒரு பாத்திரத்தில்நீர் ஊற்றி காய்ந்த செடியை வைத்தார். சிறிது நேரத்தில் அச் செடியின் இலைகள் மெதுவாக உயிரடைய ஆரம்பித்தன. இன்னும் சொற்ப நேரம் கழித்து பார்த்து அது மிகவும் அழகான உயிருள்ள செடியாய் காட்சியளித்தது.

சகோதரியே! நீயும் கடந்த காலங்களில் துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடந்து, பாவிகளுடைய வழியில் நின்று, பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்கார்ந்ததின் நிமித்தம் உன் வாழ்க்கையும் காய்ந்து போன செடியைப் போன்று இருக்கலாம். ஆனால் இன்று **சங்கீதம் 1:2-3 (2.) கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து. இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். 3. அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு. தன் காலத்தில் தன் கனியைத் தந்து. இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்: அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.** இவ் வசனங்களின் பிரகாரம் தீர்மானம் எடுத்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றால் உன் வாழ்க்கையும் அழகிய செடியாக மாற்றம் பெறும்.

திருமதி. J.பிலி







பரந்த பூமியிலே நடமாடுகின்ற சில மனித நடைபிணங்களை நாம் அவதானிக்க முடியும். வாழ்வின் கொடுமைகளை அனுபவித்து, வாழ்வில் ஏற்படும் கசப்புக்கள், புரிந்து கொள்ளாத பிளவுகள், பிரிவுகள், உடல் தளர்வுகள், வியாதிகள், இழப்புக்கள். இவை அனைத்தையும் மனதிற்குள் புதைத்து தடுமாறி, திசை மாறி போக நினைக்கும் அன்பு நண்பா/நண்பி! உனக்கு ஒரு செய்தி.

வேதாகமத்தில் **யோவான் 11:35இல் பார்க்கின்றோம்: இயேசு கண்ணீர் விட்டார்.** இது மிகவும் சிறிய வசனம். **"இயேசு கண்ணீர் விட்டார்"** கண்ணீர் விட்டார்? இயேசு கிறிஸ்துவின் பூவுலக வாழ்வில் பெத்தானியா என்னும் கிராமத்தில் இவரிற்கு அன்பாக இருந்த ஒரு குடும்பத்தில் லாசரு என்னும் சகோதரன், வியாதிப்பட்டு, அவன் மரித்துப் போகின்றான். இவனை நம்பி இருந்த இரண்டு சகோதரிகள் உதவி அற்று, ஆறுதல் அற்று, தனித்தவர்களாக, ஆதரவற்றவர்களாக காணப்படுகின்றார்கள். இவ் இழப்பின் கொடூரம் அவர்களை மிகவும் பாதித்தது. **யோவான் 11:33 அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து:** சகோதரிகளும் ஊர் மக்களும் மிகவும் அழுதார்கள். இம் மனமுறிய வேதனையை கண்ட

> **சகோதரிகளும் ஊர் மக்களும் மிகவும் அழுதார்கள். இம் மனமுறிய வேதனையை கண்ட இயேசு கலங்கி துயரம் அடைந்தார், கண்ணீர் விட்டார்.**

இயேசு கலங்கி துயரம் அடைந் தார். கண்ணீர் விட்டார்.

அன்பு சகோதரா, சகோதரி இது போன்ற அனுபவத்திற்குள் அல்லது இதைவிட மிக பயங் கரமான அனுபவத்திற்குள் நான் கடந்து போய்க்கொண்டிருக்கின் றேன். **எனக்கு யாரும் இல் லையே! என கண்ணீர் வடிக்கும் அன்பு உள்ளமே, உன் கண்ணீரை கண்டு அவர் கடந்து போகமாட்டார். அவர் உனக்காக துயரப்படு கின்றார்.** நீ முகங்கொடுக் கும் போராட்டத்தை, வேத னையை, அவர் காண்கின் றார். அவர் கண்ணீர் விட்டு கடந்து போகவில்லை. அவர் கண்ணீரையும் களிப்பாய் மாற்றுகின்ற ஆண்டவர் ஆகவே தான் அவர் சொன்னார்: **யோவான் 11: 43-44 (43.) இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். 44. அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப் பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்.** லாசருவே வெளியே வா என்ற போது மரித்த வன் வெளியே வந்தான். அந்த குடும்பம் மகிழ்ச்சியடைந்தது.

**இதே போன்று, மரித்துப் போன நிலையோடு, போராட்டத்தோடு, மனவேதனையோடு இருப்பவர்களே! உங்களை வாழ வைக்கும்படி புதுஜீவன் கொடுக்கும்படி உங்களுக்காய் துயரப்படும், கண்ணீர்விடும் இயேசுவை விசுவாசித்து, உங்கள் சோகங்களை அவரிடமாய் சொல்லுங்கள். அவர் உங்கள் வாழ்வை மறுபடியும் களிப்புள்ளதாய், சந்தோஷம் நிறைந்ததாய் மாற்றி தருவார்.**

> “ நீ முகங்கொடுக்கும் போராட்டத்தை, வேதனையை, அவர் காண்கின்றார். அவர் கண்ணீர் விட்டு கடந்து போகவில்லை; அவர் கண்ணீரையும் களிப்பாய் மாற்றுகின்ற ஆண்டவர்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

உங்கள் அன்பின்
**J.கிறேசியன்.**




**இக்கட்டடமானது இயேசுவால் மீட்கப்பட்ட ஒவ்வொருவரையும் உள்ளடக்கி இருக்கிறது.** *சபையானது தேவனுடைய ஆலயம், அவரது நோக்கத்திற்காக பிரித்து வைக்கப்பட்டுள்ளது.* **1கொரிந்தியர் 3:16 நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? சபையானது அவர் தங்கும் ஸ்தலமாகவும், பசியுள்ள ஆத்துமாக்களுக்கு தன்னை வெளிப்படுத்தும் இடமாகவும் உள்ளது.** *தேவன் தன் சபைக்கு அவரது வார்த்தையைக் காக்கும்படிக்கும், உலகில் உள்ள மக்கள் எல்லோருக்கும் அறிவிக்கும் படிக்கும் கூறியுள்ளார்.*

**தேவ சபையானது பாவ உலகில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.** *காரணங்கள்: அவரது சித்தத்தை நிறைவேற்றவும்,* **உலகத்தில் ஓர் வெளிச்ச வீடாகவும், ஜீவ படகாகவும், காப்பாற்றும் நிலையமாகவும் செயல்பட வேண்டும்.**

## சபையின் வெற்றியும் ஜெயமும்

*சபையானது இந்த உலகத்தில் போராடி எதிர்க்கும் தன்மையுள்ளதாக இருக்க வேண்டும்.* **உலகம் எம் போராட்டக்களம்.** *சபைக்கு அநேக எதிரிகள் உண்டு; 01. பிசாசும் அவனுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் அவன் கூட்டமும். 02. பாவம்* **03. உலகம் 04. மாமிசம் 05. மரணம்.** *இயேசு தன் சபையைக் குறித்துப் பேசும் போது அவர் அப் பேச்சை வெற்றி முழக்கத்தோடேயே முடித்தார்.*

**"பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளவதில்லை – மத்தேயு 16:18"** *பாதாளத்தின் வாசல்கள் எனும் போது சபையின் மீதும் விசுவாசிகள் மீதும் பிசாசானவன் தொடுக்கும் பலவிதமான தாக்குதல்கள் ஆகும்.* **ஆனால் கல்வாரியில் இயேசு சம்பாதித்த ஜெயத்தின் மூலம் நாம் இவற்றை எதிாத்து மேற்கொண்டு ஜெயம் பெறலாம்.**

சபையானது சவால்களைச் சந்திக்க வக்கற்று நிற்க வேண்டியதில்லை. **எபேசியர் 6:13 ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். யோவான் 10:10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.** பிசாசு சபைக்கெதிராக தன் போராட்டத்தில் பல்வேறு வழிகளைக் கையாளுகின்றான். **சில வேளைகளில்:**

01. உபத்திரவத்தின் மூலம்.
02. முகத்துதி அல்லது பொய்யாய் புகழுவது (பப்பாவில் ஏற்றுவது).
03. வேத புரட்டல்கள்.
04. திவ்விய சத்தியங்களை விட்டுக் கொடுத்தல்.
05. கள்ளச் சகோதரர்கள்.
06. மந்தைக்குள் இருக்கும் ஓநாய்.
07. அவிசுவாசம்.
08. உலக சிநேகம்.

இவ்விதமாக பல வழிகள். இதில் பிசாசு தோல்வி காணும் போது; **அவன் அதி தீவிர மதப்பற்றின் மூலமும் பொய்யான அக்கியின் மூலமும் தாக்கி அழிக்கப்பார்ப்பான்.** பிசாசு எப்போதும் சபையின் அஸ்திபாரத்தை இரகசியமாக அழிக்க முற்படுவான்.

**இதில் இருந்து கிறிஸ்தவத்தின் முக்கியமான, மூலாதாரமான, அடிப்படையான அம்சங்களின் மீதே கை வைப்பது தெரிகிறது.**

*01. பழமை வாதம்.*

*02. புத்திநுட்பம்.*

*03. சம்பிரதாயம்.*

*04. பொருட்கொள்கை*

என்பன பிசாசு பாவிக்கும் ஆயுதங்கள். **பிசாசு சபையை வனாந்தரமாகவும், மலட்டுத்தன்மை வாய்ந்ததும் ஆக்கவே முற்படுகிறான்.** ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம், இயேசு நமக்கு ஜீவனைக் கொடுக்கவும், அது பரிபூரணப்படவுமே வந்தார். **அவர் ஜெய வீரன், எங்களது எல்லா எதிரிகளையும் இயேசு சிலுவையில் வெற்றி சிறந்தார்.** இயேசு தன் சபை எப்பொழுதும் வெற்றியுள்ளதாய் இருக்கவே உதவி செய்வார்.

**நாமும் அப்போஸ்தலனாகிய பவுலுடன் சேர்ந்து நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கி தேவனுக்கு ஸ்தோத்திரம்**

1கொரிந்தியர் 15:57 எனக்கூறலாம். ஆனால் சபை எப்போதும் வெற்றியுள்ளதாக இருக்கவில்லை. காரணம்; அது தன் எஜமானுக்கு எப்போதும் உண்மையுள்ளதாக இருக்கவில்லை. **சில சந்தர்ப்பங்களில் வெட்கப்படும் அளவுக்கு பிசாசினால் தோற்கடிக் கப்பட்டுள்ளது.**

இதற்குக் காரணம்; தூக்க மயக்கம், உலக சிநேகம், அவிசுவாசம். **சபை எப்படி கர்த்தருடைய யுத்தத்தை உண்மையோடு செய்ய வேண்டும் என்பதனை புரிந்து கொள்ளவில்லை.** ஆனால் எப்போ சபை தன்னை தேவனுக்கு முன் தாழ்த்தி பாவத்தை அறிக்கை செய்து, கிஸ்துவாகிய ஆண்டவருக்கு தன்னை புதிதாக அர்ப்பணித்து **பரிசுத்த ஆவியானவரினால் புதிதாக்கப்பட்டு, உயிர்ப்பிக் கப்படும் போது,** இயேசுவின் வாக்குத்தத்தம் உண்மையுள்ளதாய் இருக்கும். **பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது.**

## சபையைப் பற்றிய இரகசியம்

**எபேசியர் 5:32 இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்து வைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்.** சபையைப்பற்றி பேசும் போது; சிலர் பயமும், சந்தேகமும் கொள்வது உண்டு. இதற்குச் சபைப் பிரிவுகள் ஒரு காரணமாகும். **இவர்கள் எதை உண்மையான சபை எனக் கொள்வது எனக்கேட்பர்.** சிலர் தமக்கு உள்ளூர் சபைகளில் அங்கத்த வர்களாக வருவதற்கு விருப்பமில்லை, எனவும் சுயாதீனமாக இருக்கவே விரும்புகிறோம் என்பர். **எந்த சபையும் திறமையான சபை இல்லை.**

ஆனால் உண்மையான சபையின் தன்மையைப் பற்றிய தெளிவு உண்டாகும் போது, இப்படிப்பட்ட அனுபவத்திற்காக நன்றியுள்ளவர்களாக இருப்பீர்கள். **சபையைப் பற்றிய இரகசியம் வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. விசேஷமாக,** புதியேற்பாட்டில் சபையைப் பற்றிய உண்மைகளையும் கோட்பாடுகளையும் காணலாம்.

**சபையைப் பற்றிய சரியான எண்ணத்தை அறிந்து கொள்ள எல்லா உண்மைகளையும், கோட்பாடுகளையும் ஒன்றிணைந்து பரிசுத்த ஆவியானவா மூலம் அதை வெளிப்படுத்த இயேசுவிடம் கேட்க வேண்டும்.**

*(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பருபன்)*

தொடரும்...

# குறுக்கெழுத்துப்போட்டி – 61

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | ☺ | ☺ | ☺ | 02 |
| | ☺ | ☺ | | | | | 03 | |
| | ☺ | 04 | | | ☺ | ☺ | | |
| | ☺ | | | | | 05 | | ☺ |
| ☺ | ☺ | ☺ | | | 06 | | | ☺ |
| | | ☺ | ☺ | ☺ | ☺ | 07 | ☺ | |
| | 08 | | | | | ☺ | ☺ | |
| | 09 | | | | | | | |
| 10 | | | | ☺ | | | | 11 |

குறிப்பு:- 12 வயதுக்கு மேற்பட்டவர்களை தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
- நன்றி -

## இடமிருந்து வலமாக

01. இவர்கள் தேனீக்களைத் துரத்துவது போல மலையின் மேல் ஏறினவர்களைத் துரத்தினார்கள்
04. தெக்கோவாக்கு மூப்பன்
08. அமத்சியா எருசலேமிலிருந்து இங்கே ஓடிப்போனான்
09. இது சமைக்கப்பட்ட மண்பாண்டம் உடைக்கப்பட வேண்டும்
10. ஈயேலின் மூத்த குமாரன்

## வலமிருந்து இடமாக

03. இதற்கு முற்காலத்தில் கீரியாத்செப்பேர் எனப்பேர்
05. சமாரியாவின் .......... மேல் ஆணையிடுகிறவர்கள் விழுவார்கள்
06. இந்த ராஜா விரும்புவாரில்லாமல் இறந்து போனான்
11. இவர்கள் ஏனாக்கியரைப் போல நெடியவர்கள்

## மேலிருந்து கீழாக

01. எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழு வருஷத்திற்கு முன்னே இது கட்டப்பட்டது
02. யாபேசை முற்றிகை போட்டவன்
03. சோரேக் பள்ளத்திக்கில் குடியிருந்த ஒரு ஸ்திரி

## கீழிருந்து மேலாக

07. சகரியாவின் அப்பா
09. "எனக்காக அந்த ஜனத்தை சபிக்க வேண்டும்" எனக் கூறியவன்
10. "நான் யூதாவுக்கு உட்கையான ஒரு நாய்த்தலையா" எனக் கேட்டவன்
11. இங்கே 12 நீரூற்றுக்கள் இருந்தன

# கனம் பண்ண மறவாதே!

## வேதப்பகுதி: எஸ்தர் 2:5–11

ஒரு ஏழைத்தாய் கல் உடைக்கும் வேலை செய்தாள். ஆனால் தன் மகனை அவள் நன்றாக படிக்க வைத்தாள். அவன் படித்து பெரிய ஒரு அதிகாரியாக மாறினான். ஒரு நாள் அந்த தாய் தன் மகனைப் பார்ப்பதற்கு ஆசையோடு சென றாள். ஆனால் அந்த மகன் அந்த தாயைக் குறித்து பிறரிடம் "அவர் என் வீட்டில வேலை செய்கிறவர்" என்றானாம். உயர்ந்த நிலைக்கு வந்ததும் தன்னை வளர்த்து ஆளாக்கிய தாயை அவன் அற்பமாக எண்ணினான். எவ்வளவு வேதனை இது.



**ஆனால் வேதாகமத்தில் நாம் பார்க்கும் எஸ்தர் வித்தியாசமானவள். அவளை வளர்த்து ஆளாக்கியவர் அவளுடைய நெருங்கிய உறவினராகிய மொர்தெகாய். ஒரு நாள் அவள் ராஜாவின் மனைவியானாள். ஆனாலும் அவள் தன்னை வளர்த்து ஆளாக்கிய மொர்தெகாயை மதித்து நடந்தாள். மொர்தெகாயின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தாள். நீயும் நாளைக்கு உயர்ந்த நிலைக்கு வருவாய். அப்போதும் உன் தாய் தந்தையரை மதித்து நடக்க கவனமாயிரு.**

**சிந்தனைக்கு:- நாம் உயர்வதற்கு உதவியாயிருந்தவர்களை ஒரு போதும் தாழ்வாக எண்ணக்கூடாது. கர்த்தர் அப்படிப்பட்டவர்களை ஆசீர்வதிக்கமாட்டார்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – மார்ச் 14






## கார்ல் பேக்கர்

## 1873 – 1945

## கல்வியைத் தந்தால்

மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர் கார்ல் பேக்கர். குடும்ப பொறுப்பின் காரணமாக மேற்படிப்பைத் தொடர முடியாத நிலையில் மிகவும் கஷ்டப் பட்டார். விதவையான தாய், திருமணமாகாத சகோதரி இவர்களைக் காப் பாற்ற வேண்டி பட்டறை ஒன்றில் வேலை செய்ய ஆரம்பித்தார். அந் நிலையில் ஆண்டவரோடு ஒரு பொருத்தனை செய்தார், ஆண்டவரே நீர் எனக்கு நல்ல கல்வியைத் தந்தால் என் வாழ்வை உமக்கு அர்ப்பணித்து ஊழியம் செய்வேன். ஆண்டவர் இவரின் அர்ப்பண ஜெபத்தைக் கேட்டார்.

**1916ஆம் ஆண்டு தனது 22ஆம் வயதில் பிலதெல்பியா கல்லூரியில் மருத்துவப் படிப்பைத் தொடர்ந்தார். ஆண்டவரின் வழிநடத்துதல் ஆச்சரியமான முறையில் இவரைத் தாங்கியது. அமெரிக்காவில் மருத்துவராகத் தன் பணியை ஆரம்பித்தார். பெயரும், புகழும் இவரைத் தேடி வந்தன.**

எதிர்பாராத விதமாக ஆப்பிரிக்காவிலிருந்து மிஷனெரிப் பணிக்காக ஒரு அழைப்பு இவரைத் தேடி வந்தது. ஆனால், குடும்பச் சூழ்நிலையின் காரணமாக அவ்வழைப்பை இவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும், தான் ஆண்டவரோடு செய்த பொருத்தனையை நினைத்துப்பார்த்தார். 1928ஆம் ஆண்டு, தனது பணியை விட்டுவிட்டு ஆப்ரிக்கா நோக்கிப் பயணமானார். 1934ஆம் ஆண்டு ஓசா என்ற இடத்தில் மருத்துவமனை ஒன்றை நிறுவினார். அனுதினமும் 200க்கும் மேற்பட்ட

மக்கள் இவரைத் தேடி வந்தனர். மந்திரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மக்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் ஈர்க்கப்பட்டனர்.

வேதாகம சம்பவங்களை ஆப்பிரிக்க மக்கள் புரிந்து கொள்ளும் படி அவைகளை படங்களுடன் விளக்கிக் காட்டி போதித்தார். தன்னை நாடி வந்த நோயாளிகளின் உடலிலும், உள்ளத்திலும் சுகம் பெற்றனர். இட்டூர் என்ற காட்டுப்பகுதியில் 1100 ஏக்கர் நிலத்தில் தொழுநோயாளிகளுக்கென கிராமம் ஒன்றை ஏற்படுத்தி அதில் 4000 தொழுநோயாளிகளைத் தங்க வைத்தார். மனநோயாளிகளும், பிசாசு பிடித்தவர்களும் இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தால் புதுவாழ்வு பெற்றார்கள். 60 வருடங்கள் ஆப்பிரிக்காவில் மிஷனெரியாகப் பணி செய்த இவர் கிறிஸ்துவைப் போன்றே வாழ்ந்து காட்டினார். தன் ஓட்டத்தை முடித்தார்.

**அன்பரே! தேவை நிறைந்த இடங்கள் பல உண்டு என்று அறிவீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இன்று என் வாழ்வின் கடைசி நாளாக இருக்குமானால் அதனைப் படுக்கையில் நான் செலவழிக்கமாட்டேன்.**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 12*

---

## மேரி ஜோன்ஸ்

### 1784 –



### மாபெரும் மகிழ்ச்சி

வேல்ஸ் நாடு, சிறுமி மேரி ஜோன்ஸ்க்கோ கொள்ளை ஆசை. சொந்தமாக ஓர் வேதாகமம் வாங்க வேண்டும்.

அந் நாட்களில் வேதாகமம் கிடைப்பது மிகவும் அரிது. அப்படியே கிடைத்தாலும் ஏழைகள் அதை வாங்க முடியாது. விலையோ மிக அதிகம். மேரி ஜோன்ஸ்ஸோ பரம ஏழை. அப்படியானால் வேதாகமத்தை எங்கனம் வாங்க முடியும்?

ஆறு ஆண்டுகள் கடந்தன. உள்ளத்தின் வாஞ்சை வளர வளர தான் சேமித்து வைத்திருந்த பணமும் உயர்ந்தது, ஆவலும் வளர்ந்தது.

ஓர் நாள்; மகிழ்ச்சி பொங்க துள்ளிக் குதித்தாள் மேரி ஜோன்ஸ். வேதாகமத்திற்கான பணம் சேர்ந்து விட்டது. 25 மைல்கள் தூரத்திலுள்ள

ஒரு போதகரிடம் வேதாகமம் இருப்பதை அறிந்து அதிகாலமே உற்சாகத்துடன் தன் நடை பயணத்தை துவங்கினாள்.

**பெரும் மகிழ்ச்சியில் இடி விழுந்தது போல் மேரிக்கு ஏமாற்றம் அங்கே காத்திருந்தது. வேதாகமம் இல்லை என்ற பதிலை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தேம்பி, தேம்பி அழ ஆரம்பித்தாள். போதகரின் மனம் உடைந்தது.**

வேதாகமத்திற்காக ஓர் சிறுமியின் வாஞ்சையும், அவளின் பிரயாசமும் போதகரின் உள்ளத்தை அசைத்தது. தான் உபயோகப் படுத்துவதற்காக வைத்திருந்த அழகிய வேதாகமம் ஒன்றை எடுத்து வந்தார். மேரியின் கைகளில் கொடுத்தார்.

தன் கண்களையே நம்ப முடியாதவளாய் போதகரையே உற்றுப் பார்த்தாள். அவள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஊரை நோக்கி ஓடோடி வந்தாள். உறவினரை அழைத்தாள். உற்சாகத்தால் நிறைந்தாள். வேதாகமத்தை உரக்க வாசித்தாள். மேரியின் வாஞ்சையும், ஆர்வமுமே சர்வதேச வேதாகமச் சங்கம் தோன்ற காரணமானது.

**அன்பரே! வேதாகமத்தின் மீது உமது வாஞ்சை என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இறைவன் எனக்கு துணைபுரிந்தார். அவர் என் ஜெபத்தைக் கேட்டார் – மேரி ஜோன்ஸ்**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பே 09*

# குறுக்கெழுத்துப் போட்டி – 60
# சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**
01. ஆகாசின்
04. எலியாப்
08. ஏகத்
11. அபிசேனாவின்

**மேலிருந்து கீழாக**
01. ஆசாப்
03. ரூப்பரிடத்தில்
06. கோனியா

**வலமிருந்து இடமாக**
02. தொபியா
03. ரூர்க்காம்
05. அஸ்கலோன்
07. சோவான்
10. திடநம்பிக்கை

**கீழிருந்து மேலாக**
08. ஏசாவின்
09. பேசோர்
11. அந்திக்கிறிஸ்து

# வினா விடை – 63

01. பயித்தியக்காரி பேசினது போல பேசினவள் யார்?

02. சுட்டிருந்த வாற்கோதுமை அப்பம் உருண்டு வந்ததெங்கே?

03. இது தேவனுடைய விரல் என்று சொன்னவர்கள் யார்?

04. "பைத்தியம்" அது என்ன என்று அறிய விரும்பினவன் யார்?

05. யாருடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்?

06. குளிர்காலத்தில் தங்கும் அறை வீட்டில் உட்கார்ந்திருந்தவன் யார்?

07. கைகளாலே பெயர்க்கப்படாத ஒரு கல் உருண்டு வந்ததெங்கே?

08. ஏழைகளின் நியாயத்தை கவனித்தறிகிறவன் யார்?

09. குளிர்ந்த மனமுள்ளவன் யார்? விவேகி – நீதி 17:27

10. என் கிருபை உனக்குப் போதும் என்று சொன்னவர் யார்?

## வினாவிடை – 62 சரியான பதில்கள்

01. யூதா – ஆதியாகமம் 37:26–27
02. ஆபேல் – ஆதியாகமம் 4:8
03. சிம்சோன் – நியாயாதிபதிகள் 16:20
04. யோனா – யோனா 4:1–2
05. நேபுகாத்நேச்சார் – IIஇராஜாக்கள் 25:8–9
06. யாக்கோபின் திருமணத்தில் – ஆதியாகமம் 29:16–28
07. செலோமித்தின் மகன் – லேவியராகமம் 24:10–23
08. யூதா – ஆதியாகமம் 49:8
09. கானான் தேசத்தை சுதந்தரிப்பதில் விசுவாசியாதவர்கள் – உபா 1:32–38
10. எலியாப் (தாவீதின் சகோதரன்) 1சாமு 17:28

# அன்லின் ஆன்மீக விருந்து!

## பாவம் செய்ததனாலே ஒளிவு;
## ஒளித்ததனாலே பாவம்;
## பாவத்தை ஒளிப்பதே பாவம்;
## கொடுத்தல் என்ற போர்வைக்குள் கொடுக்காமல் ஒளிவு!

**பா**வம் மனிதனை தேவனைவிட்டு தூரப்படுத்தும், பாவமும் பாவம் செய்பவர்களும் கர்த்தருடைய கண்களுக்கு முன்பாக நிற்க முடியாது. அந்த வகையில் வேதாகமத்தின் அடிப்படையில் பாவம் சம்பந்தமான நான்கு வித ஒளித்து வைத்தலைக் குறித்து பார்க்கலாம்.

### *தேவனுக்கு தங்களை ஒளித்துக் கொண்டார்கள்*

ஆதாம் - ஏவாள் பாவம் செய்து தேவனை விட்டு ஓடி ஒளிந்து கொண்டார்கள். மாலையின்குளிர்ச்சியான வேளையில் தான் படைத்த மனிதர்கள் எங்கே என்று ஆண்டவர் அவர்களைத் தேடி வருகின்றார். ஆனால் அவர்களோ தங்களைத் தேவன் காணாத படிக்கு மறைத்துக் கொண்டார்கள். **ஆதியாகமம் 3:8 பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய**

**சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக் குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். தேவன் வந்து அவர்களைக் கூப்பிட்ட போது ஆதாம்; நாங்கள் பாவம் செய்து நிர்வாணிகளாயிருக்கின்றோம். அதனால் ஒளித்துக் கொண்டோமென்று பதில கூறி னான்.** கர்த்தர் உள்ளான ரீதியில் ஆத்துமாக் களைகுணமாக்க விரும்புகின்றார். கர்த்தர் தன்னுடையமணவாட்டியாகிய சபையை ஆயத்தப் படுத்த விரும்புகின்றார்.

> "கர்த்தர் உள்ளான ரீதியில் ஆத்துமாக்களை குணமாக்க விரும்புகின்றார். கர்த்தர் தன்னுடைய மணவாட்டியாகிய சபையை ஆயத்தப்படுத்த விரும்புகின்றார்.

**யோசுவா 3:5 யோசுவா ஜனங்களை நோக்கி: உங்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளுங்கள். நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செயவார் என்றான்.** எம்முடைய வாழ்க்கையில் முதலாவது பாவத்தில்இருந்து விடுதலை பெறுகின்ற அற்புதம் எமக்கு அவசியமாயிருக்கின்றது. அப்பொழுது எங்களுடைய சரீரத்தில் இருக்கின்ற வியாதிகள் அகலும் என்று கர்த்தர் சொல்கின்றார். ஆதாம் - ஏவாள் பாவம் செய்து தங்களை ஒளித்துக் கொண்டாாகள். அவர்கள் தங்களை எங்கு ஒளித்துக் கொண்டாலும் கர்த்தருடைய கண்கள் தங்களைக் காண்கின்றது என்பதனை அறிந்து கொள்ளவில்லை.

இன்றைக்கு நீங்கள் உங்கள் வாழ்வில் என்ன காரியத்திற்காக கர்த்தருடைய முகத்திற்கு மறைவாக ஒளிந்திருக்கின்றீர்கள்? இப்படியான இரகசியங்களை கர்த்தர் அறிய மாட்டார் என்று எண்ணுகின்றீர்களா? ஆவிக்குரிய ரீதியில் உயர்ந்த நிலையில் இருக்கின்றேன் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றீர்களா? மறைவான பாவங்களை விட்டு விலகுங்கள். நீதிமான்கள்மேல்அவருடைய கண்கள் நோக்கமாயிருக்கின்றது. அவர்கள்பாவம செய்து கர்த்தருடைய மகிமையை இழந்து விட்டார்கள். **நீங்களும் பாவம் செய்தால் அவருடைய சமுகத்தை விட்டு ஒளிந்து கொள்வீர்கள்.** தேவன் படைத்த முதல் மனிதன் பாவம் செய்து தேவ சமூகத்தை விட்டு ஒளிந்து கொண்டான்.

## *சாபத்தீடானதை ஒளித்து வைத்தான்*

**யோசுவா 7:1-3 (1.) இஸ்ரவேல் புத்திரர் சாபத்தீடானதிலே துரோகம்**

பண்ணினார்கள; எப்படியெனில், யூதா கோத்தரத்துச் சோராகுடைய குமாரனாகிய சப்தியின் மகன் கர்மீக்குப் பிறந்த ஆகான் என்பவன், சாபத்தீடானதிலே சிலதை எடுத்துக்கொண்டான்; ஆகையால் இஸ்ரவேல் புத்திரர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது. 2. யோசுவா எரிகோவிலிருந்து பெத்தேலுக்குக் கிழக்கிலுள்ள பெத்தாவேன் சமீபத்திலிருக்கிற ஆயிபட்டணத்துக்குப்போகும படி ஆட்களை அனுப்பி: நீங்கள்போய், அந்த நாட்டை வேவு பாருங்கள் என்றான். அந்த மனுஷர் போய், ஆயியை வேவு பார்த்து, 3. யோசுவாவினிடத்தில் திரும்பி வந்து, அவனை நோக்கி: ஜனங்கள் எல்லாரும் போகவேண்டியதில்லை; ஏறக்குறைய இரண்டாயிரம் மூவாயிரம் பேர் போய், ஆயியை முறிய அடிக்கலாம்; எல்லா ஜனங்களையும் அங்கே போகும்படி வருத்தப்படுத்த வேண்டியதில்லை; அவர்கள் கொஞ்சம பேர்தான் என்றார்கள். ஆகான் இஸ்ரவேலின் நடுவில் சாபத்தீடானதை ஒளித்து வைத்திருந்தான். பட்டணங்களைப் பிடித்து, ஜெயத்திற்கு மேல் ஜெயம் எடுத்து வந்த இஸ்ரவேலர் ஆயி பட்டணத்திற்கு எதிராக சென்ற போது தோல்வியைச் சந்தித்தார்கள்.

அப்பொழுது யோசுவா ஆண்டவரே இத்தனை வெற்றிகளைக் கொடுத்தீரே, ஆனாலும் இந்த ஆயி பட்டணத்திலே ஏன் எங்களுக்கு தோல்வி, இதற்கு காரணம் என்ன என்று தேவனை நோக்கி கதறுகின்றான். இவர்கள் தோல்வி அடைந்ததற்குரிய காரணத்தை ஆண்டவர் யோசுவாவுக்கு வெளிப்படுத்துகின்றார். ஆகான் சாபத்தீடான காரியங்களை எடுத்து வந்து இஸ்ரவேலின் நடுவில் மறைத்து வைத்திருந்தான.

யோசுவா – இஸ்ரவேல் ஜனங்கள் என்பவர்களைக் குறித்து பார்க்கும் போது; இவர்கள் தேவனுடைய பிள்ளைகள் ஒன்று கூடுகின்ற இடமாகிய கர்த்தருடைய ஆலயம். கர்த்தருடைய பிரசன்னம், மகிமை, வார்த்தை வெளிப்படுகின்ற இடம். உலகத்திலுள்ள சாபத்தீடான காரியங்களை எங்களோடு எடுத்துக் கொண்டு, சேர்த்துக் கொண்டு கர்த்தருடைய ஆலயத்திலும், சமூகத்திலும் ஒன்றாக கலந்து ஜீவிக்கின்ற காரியத்தை ஆண்டவர் காண்கின்றார். பரிசுத்தத்திற்கும், அசுத்தத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை: அந்தகாரத்திற்கும் வெளிச்சத்திற்கும் எந்த ஐக்கியமும் இல்லை. பரிசுத்தமான தேவனுடைய பிள்ளைகளோடு பேய்களுடைய காரியங்களுக்கு சம்பந்தம் இல்லை.

ஆகான் சாபத்தீடான காரியத்தை கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் கொண்டு வந்தான். கர்த்தருடைய வார்த்தைககும், கட்டளைக்கும் கீழ்ப்படியாக ஒவ்வொரு சங்கர்ப்பங்களிலும் சாபத்தீடானதை உங்களுடைய வாழ்க்கைக்குள் சேர்த்துக் கொள்கின்றீர்கள். உபாகமத்தில் ஆண்டவர் சொல்கின்றார: நீ கீழ்ப்படிந்தால் உனக்கு ஆசீர்வாதம், கீழ்ப்படியாவிட்டால் உனக்கு சாபம். உலகத்தின் காரியங்களையும், கர்த்தருடைய காரியங்களையும் ஒன்றாக கலக்கின்ற வேளையில் சாபத்தீடான காரியங்களை சேர்த்துக கொள்கின்றோம். கர்த்தருடைய ஆலயத்திற்கும் உலகத்தின் காரியங்களிற்கும் எந்த சம்பந்தமும் உறவும் இல்லை. நீங்கள் கர்த்தருடைய ஆலயமாயிருக்

கின்றீர்கள். கர்த்தருடைய சித்தம், திட்டம் நிறைவேறாத படிக்கு தடையாக இருக்கின்ற சாபத்தீடான காரியங்களை எங்களை விட்டு எடுத்து எங்களை பரிசுத்தம் பண்ணி பரிசுத்த அலங்காரத்தைக் கொடுக்க தேவன் விரும்புகின்றார்.

சாபத்தீடான காரிங்கள் எம்முடைய வாழ்க்கையில் இருக்கின்ற போது கர்த்தருடைய ஜெயத்தை நம்மால் கண்டு கொள்ள முடியாது. நாம் நன்றாய் வாழ்ந்து கொண்டிருக்கும் போது ஏதாவது கஷ்டம், துன்பம், வேதனை, தோல்விகள் வரும் போது மந்திரவாதிகளிடமும், ஜோதிடம் பார்ப்பவர்களிடமும் பரிகாரம் தேடச் செல்கின்றோம். இந்த பிரச்சனை ஏன் வந்தது? இந்த தோல்விக்கு காரணம் என்ன? என்று எம்முடைய சொந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பதில்லை. அநேக நேரத்தில் எங்களுடைய வாழ்க்கையின பாரங்களை மனிதர்களிடம் சொல்கின்றோம். என்னுடைய வாழ்க்கையில் இருக்கின்ற பாவம் என்ன? எந்த இடத்தில் தவறியிருக்கின்றேன்? என்பதனை சிந்தித்து ஜெபிப்பதில்லை. சாபத்தீடான காரியங்களை எம்முடைய வாழ்க்கையில் சேர்த்துக் கொண்டிருக்கின்றோமா என்பதனை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆகான் செய்த காரியத்தினால் தான் தோல்வி வந்தது.

**66 99**

**சாபத்தீடான காரிங்கள் எம்முடைய வாழ்க்கையில் இருக்கின்ற போது கர்த்தருடைய ஜெயத்தை நம்மால் கண்டு கொள்ள முடியாது.**

*என்னுடைய சபையில் ஒரு விசுவாசி இருந்தார்கள். அவர்களுடைய வீட்டிலே ஜெயம் செய்வதற்காக நான் சென்றிருந்த போது; இந்த வீட்டிலே சாபத்தீடான சில காரியங்கள் இருக்கின்றது என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். அதனை நான் அந்த விசுவாசியிடம் கூறினேன். அதற்கு அவர் தங்கள் வீட்டில் அவ்வாறான எந்தக் காரியங்களும் இல்லை, போதகர் பொய் சொல்லி விட்டார் என்று பெருமையிட்டுக் கொண்டார். நான் இதனைக் கூறி ஜெபித்துவிட்டு வந்து விட்டேன். சில காலம் சென்றது. அந்த வீட்டை இன்னொரு விசுவாச குடும்பத்தினர் வாங்கினார்கள். வாங்கிய அந்த வீட்டை அவர்கள் சுத்தம் செய்து கொண்டிருந்த போது நான் ஏற்கனவே அந்த வீட்டிலே சாபத்தீடான காரியம் இருக்கின்றது என்று கூறியது போன்று அந்தக் காரியத்தை கண்டார்கள். உடனே அவர்கள் என்னை அழைத்தார்கள்; நான் அங்கு சென்று பார்த்த போது சாபத்தீடான காரியம் இருப்பதனைக் கண்டு கொண்டேன். அந்தக் காரியம் அந்த வீட்டில் இருந்தமையால் அங்கிருந்த விசுவாசக் குடும்பத்தினால் ஆசீர்வாதமாய் இருக்க முடியவில்லை. அவர்கள் கஷ்டம், வறுமை, பிரச்சினை, வியாதிகளினால் ஆட்கொள்ளப்பட்டார்கள். பிற்பாடு அந்த வீட்டை வாங்கியவர்கள் அந்த காரியங்களையெல்லாம் அகற்றி அந்த வீட்டை மிகவும் அழகுபடுத்தினார்கள். இப்போது அந்த வீடு மிகவும் ஆசீர்வாதம் நிறைந்ததாயும், கர்த்தருடைய வேலைக்காகவும் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது.*

இஸ்ரவேலின் நடுவில் ஆகான் என்பவனுடைய சாபத்தீடான காரியம் இருந்தமையால் அவர்கள் தோல்வியைக் கண்டார்கள். உங்களுடைய வீட்டிலே பீடி, சிகரெட், வெற்றிலை, பாக்கு, புகையிலை, பார்க்க கூடாத இறுவட்டுக்கள் (CD/DVD) இருக்குமாயிருந்தால் அங்கே ஆசீர்வாதம் ஒரு நாளும் தங்காது.

**பிசாசை அரவணைத்து அடைக்கலம் கொடுத்து அவனை உள்ளே வைத்துக் கொண்டு அவனை விரட்டினால் அது ஒரு நாளும் போகாது.** சில விசுவாசிகளுடைய தொலைபேசிகளுக்கு அழைப்பு எடுக்கும் போது அதிலே சினிமா பாடல்கள் கேட்கின்றது. இப்படியான சாபத்தீடான காரியங்கள் உங்களுடைய வாழ்க்கையில் மறைந்திருக்கும் போது வெற்றி, ஜெயம், ஆசீர்வாதங்களை உங்களால் பெற்றுக் கொள்ள முடியாது. யோசுவா இந்தக் காரியத்தை கோத்திரம் கோத்திரமாக விசாரித்த போது ஆகானிடம் சாபத்தீடான காரியம் இருப்பதனைக் கண்டு கொண்டான். அப்பொழுது யோசுவா அதை எடுத்து சுட்டெரித்தான். **எங்களுடைய வாழ்க்கையிலும் இருக்கின்ற சாபத்தீடான, உலகக் காரியங்களை வெளியே எடுக்கப்பட்டு சுட்டெரிக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.**

உங்களுடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட காரியங்கள் தொடர இடம் கொடுக்காதிருங்கள். இன்றைக்கும் அப்படிப்பட்ட காரியங்களை உங்களுடைய வாழ்க்கையிலிருந்து எடுத்து சுட்டெரிக்க பரிசுத்த ஆவியானவருக்கு இடம் கொடுங்கள். வாழ்க்கையை தேடிப் பாருங்கள். சாபத்தீடான காரியங்களை தேடிப்பார்த்து அதை எடுத்து சுட்டெரிக்க வேண்டும். சரிப்படுத்த வேண்டியவற்றை சரிப்படுத்தி, ஒழுங்குபடுத்த வேண்டியவற்றை ஒழுங்குபடுத்தும் போது எங்களுடைய வாழ்க்கையின் காரியங்கள் ஆசீர்வாதமாய் இருக்கும். நீ நிமிர்ந்து பார்ப்பாய்; அப்பொழுது கர்த்தர் உனக்கென்று வைத்திருக்கின்ற ஜெயத்தை, ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைக் காண்பாய். விசுவாசிகளே சபைக்குள்ளாக சாபத்தீடானதை கொண்டு வரவேண்டாம். கர்த்தர் வாசம் செய்யும் இடம், கர்த்தருடைய மகிமை வெளிப்படும் இடம். அதைப் பரிசுத்தமாய் காத்துக்கொள்ள வேண்டும். பரிசுத்த அலங்காரத்துடனே ஆலயத்திற்குள் வரவேண்டும். தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களைச் செய்துவிட்டு ஞாயிற்றுக் கிழமைகளில் பரிசுத்தவான்கள் போன்று ஆலயத்திற்கு வரவேண்டாம். உங்கள் சரீரங்கள் தேவனுக்கு பரிசுத்தமாய் ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும்.

## *மறைக்கப்பட்ட பாவங்கள்*

**நீதிமொழிகள் 28:13-14**

**(13.) தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். 14. எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்; தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான்.** தாவீது ராஜா கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்டவன். அவன் தன்னுடைய வாழ்க்கையில் ஒரு தடவை விழுந்தான், தவறினான். கர்த்தருடைய பார்வைக்கு அருவருப்பானதைச் செய்து விட்டு கர்த்தருக்கு முன்பாக சரியாக இருக்கின்றேன் என்று சிந்தித்தான். பிறனுடைய மனைவியை தனதாக்கி கொண்டான், பாவச் சேற்றிலே விழுந்தான்.

**பாவச் சேற்றிலே இருக்க வேண்டும், அழிந்து போக வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம் அல்ல. அவர் கிருபையுள்ளவர், மன்னிக்கின்**

றவர், இரக்கமுள்ள தேவனாயிருக்கின்றார். நாம் மனந்திரும்பும்படி இன்னொரு சந்தர்ப்பத்தை நமக்கு கொடுக்கின்றவராய் இருக்கின்றார். அவருடைய கிருபை இல்லாவிட்டால் நாம் எல்லாரும் நிர்மூலமாகி அழிந்து போயிருப்போம். பாவியாகிய ஸ்திரியைப் பார்த்து ஆண்டவர் சொன்னார்: இனிமேலும் பாவம் செய்யாதபடி கவனமாயிரு என்றார். எவன் தன் பாவத்தை மூடி மறைக்கின்றானோ அவன் வாழ்வடையமாட்டான்; மாறாக, அவனுக்கு மரணம் தான் நேரிடும். அது வெற்றியை,

" "
இதற்கு பிற்பாடு இந்த சபைக்கு சென்று என்ன பிரயோசனம் என்று கூற ஆரம்பிப்போம். இது தான் தவறிப்போகின்ற விசுவாசியினுடைய இறுதிப்பதிலாக இருக்கும்.

சுகத்தை காணாது. இதற்கு பிற்பாடு இந்த சபைக்கு சென்று என்ன பிரயோசனம் என்று கூற ஆரம்பிப்போம். இது தான் தவறிப்போகின்ற விசுவாசியினுடைய இறுதிப்பதிலாக இருக்கும்.

பாவத்தை மறைத்தால் வாழ்வடையமாட்டீர்கள். ஆயிரம் பேருக்கு ஜெபம் செய்வோம்; ஆனால் ஆண்டவரே நான் பாவம் செய்யாதபடிக்கும், உம்முடைய ஆவியை துக்கப்படுத்தாதபடிக்கும் நான் இந்த பூமியில் வாழும் நாட்கள் எல்லாம் பரிசுத்தமாய் வாழ எனக்கு உதவி செய்யும் என்று ஜெபம் செய்வதில்லை. காலையில் எழுகின்றோம், வேலைகளுக்கு செல்கின்றோம், ஊழியத்திற்காய் செல்கின்றோம் அவ்வாறு செல்லும் வேளையில் இந்த பயங்கரமான உலகத்தில் நான் பாவம் செய்யாதபடி என்னைக் காத்துக் கொள்ளும் என்று ஜெபித்து விட்டுச் செல்லுங்கள். 50% கிறிஸ்த வாழ்க்கை 50% உலக வாழ்க்கையாக இருக்கக்கூடாது. 100% கிறிஸ்தவ வாழ்க்கை வாழுங்கள். பாவத்தை எவ்வளவு தான் நீங்கள் மூடி மறைத்தாலும் அது ஒரு நாள் வெளியரங்கமாகும். ஆகவே அறிக்கை செய்து விட்டு விடுங்கள். அப்பொழுது வாழ்வடைவீர்கள். இந்தக் காலத்தில் மனந்திரும்பினால் கர்த்தருடைய இரட்சிப்பை, சேமத்தை, வாழ்வை நாம் காணமுடியும்.

## கர்த்தருடைய காரியத்தில் பொய் சொன்னார்கள்

**அப்போஸ்தலர் 5:1-2 (1.) அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். 2. தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.** இவர்கள் கர்த்தருடைய காரியத்தில் பொய் சொன்னார்கள். கணவன் தவறு செய்ததை மனைவி அறிந்திருந்தாள். எங்களுடைய குடும்பத்தில் கர்த்தருக்கு முன்பாக இரண்டு விதமான வாழ்க்கை வாழ்கின்றோம். சில குடும்பங்களில் குடும்பத்தைக் குறித்த கவலையால் மனைவி அழுது ஜெபிப்பார்கள். ஆனால் கணவன் எந்தக் கவலையும் அற்றவராய் தன்னுடைய இஷ்டத்திற்கு செயற்படுவார். அனனியா

–சப்பீராள் ஆண்டவருக்கு முன்பாக ஒரு காரியத்தை மறைத்தார்கள்.

**ஆவிக்குரிய வாழ்க்கையில் இருக்கின்ற இரகசியங்கள், மறைவான காரியங்களை தேவன் தொடும்படியாக விரும்புகின்றார். சுத்திகரிப்பு இல்லாமல மாற்றம் ஏற்படாது.** சுத்திகரிப்பு இல்லாமல் தேவனால் அற்புதங்கள் செய்ய முடியாது. கர்த்தருக்கு முன்பாக உண்மையாய் இருப்போம். கிறிஸ்துவாகிய கண்ணாடியில் எங்களைப் பார்ப்போம். அதில் உண்மையான எங்களின் சாயல் விளங்கும், எங்களுடைய வாழ்வின் நிலைமைகள் விளங்கும். இன்றைக்கு கர்த்தருடைய சந்நிதானத்தில் அவருக்கு முன்பாக உங்களுடைய ஆவிக்குரிய தரம் என்ன என்று ஆராய்ந்து பாருங்கள். **எங்களுக்கு எதற்காக இரட்டிப்பான அபிஷேகம் தேவை என்று தெரியுமா? நாம் கடலில் நடப்பதற்காகவா?, வானத்தில் பறப்பதற்காகவா? பிரியமான தேவ ஜனமே, நாம் கர்த்தருடைய சித்தத்தை, திட்டத்தை இந்தப் பூமியில் விளங்கி பூரணமான ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழவே எமக்கு இரட்டிப்பான அபிஷேகம் தேவையாக இருக்கின்றது.** பரிசுத்தமான ஒரு பாத்திரமாக நீங்கள் வாழ விரும்பினால் அபிஷேகம் உங்களுக்கு தேவையாக இருக்கின்றது.

*நான் ஊழியம் செய்வதற்காக செல்லும் வழியில் ஒரு துறவி இருக்கின்றார். அவர் என்னிடமாக; நீ இந்த கிராமத்திற்கு இனிமேல் வரவேண்டாம், மாறாக வந்தால் அது தான் உன்னுடைய இறுதி நாளாக இருக்கும் என்று என்னை எச்சரித்தார். அவர் அவ்விதமாக மூன்று தடவை என்னை எச்சரித்தும் நான் பயமில்லாதவனாக கர்த்தருடைய ஊழியத்திற்காக அந்த இடத்திற்கு நான்காவது தடவை சென்றேன். அங்கு சென்ற போது அந்த துறவி என்னோடு சந்தோஷமாய் சிரித்தும் பேசினார். வாருங்கள் போதகரே வந்து இங்கே அமருங்கள். தேனீர் அருந்திவிட்டுச் செல்லுங்கள் என்று அன்போடு பேசினார். என்னை எதிர்த்தவர் இப்போது என்னோடு நண்பனாக விரும்புகின்றாரே என்று நான் சிந்தித்தேன். அவ்வாறே அவர் என்னை ஒரு கதிரையில் அமர வைத்தார். அப்போதும் அவர் சிரித்து சிரித்து என்னோடு பேசினார். பிற்பாடு தான் கூறினார்: நீ இந்த இடத்தை விட்டு எழுந்து செல்ல முடியாதபடிக்கு உன்னை என்னுடைய மந்திரத்தால் கட்டி வைப்பேன் என்றார். உங்களால் முடிந்தால் அதனைச் செய்யுங்கள் என்றேன். அவர் கூறியது போன்றே சில விநாடிகள் அந்த கதிரையை விட்டு என்னால் எழுந்திருக்க முடியவில்லை. அப்போது நான் இயேசுவின் நாமத்தினால் என்று அறிக்கை செய்த மாத்திரத்தில் அந்த கதிரையை விட்டு என்னால் எழுந்திருக்க முடிந்தது. உடனே நான் அந்த இடத்தை விட்டு சென்றுவிட்டேன்.*

**இயேசுவின் நாமத்தை அறிக்கையிடுகின்ற மனிதன் பரிசுத்தமாயிருக்க வேண்டும். இந்த உலகத்தை வெற்றி கொள்ள, சத்துருவின் வல்லமையை மேற்கொள்ள ஆண்டவர் இரட்டிப்பான அபிஷேகத்தை எமக்குத் தரவிரும்புகின்றார்.** இந்த பூமியிலே கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த, அவருடைய சித்தத்தை செய்ய, அவருடைய திட்டத்தை நிறைவேற்ற அபிஷேகம் எமக்கு தேவையாக இருக்கின்றது. பாவத்தை மேற்கொள்ள பாவ வாழ்க்கையை வெறுத்துத் தள்ள கர்த்தர் எமக்கு அபிஷேகத்தை கொடுக்கின்றார். எனவே அந்த அபிஷேகத்தை பெற்று அவருக்கு சாட்சியாய் வாழ்வதோடு அவருடைய வருகைக்காய் ஆயத்தப்படுவோம்! ஆயத்தப்படுத்துவோம்!.

"ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"

**போதகர்: பேணாட்**
(லைட் ஹவுஸ் தேவாலயம் - கலபொட)

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் : ..............................................................

விலாசம் : ..............................................................

..............................................................

..............................................................

..............................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

To:............................................................

............................................................

............................................................

............................................................

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**